

திருப்பூர் வடக்கு மாவட்டம் சேவூர் கைகாட்டி ரவுண்டானா அருகில் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் ரூ14 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையை கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா திறந்து வைத்தார். உடன் மாவட்ட கழக பொறுப்பாளர், மாநகராட்சி முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே சீகம்பட்டி என்னுமிடத்தில் வாகனம் கவிழ்ந்ததில் 35க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களை நேரில் சந்தித்து சிகிச்சை குறித்து தி.மு.க. புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. கேட்டறிந்தார்.

# ரூ.100 கோடி பழனி கோவில் சொத்து தனியாருக்கு பத்திரப்பதிவு!

## த.வெ.க. அரசு அத்துமீறல்!

பழநி, ஜூலை 14 -

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுகளை மீறி, பழநி தண்டபாணி சுவாமிகள் மடத்துக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் நிலம், தனிநபர்களுக்கு அண்மையில் சட்டவிரோதமாக பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ள விவகாரம் பக்தர்கள், தேவஸ்தான அதிகாரிகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழநி அடிவாரம் பூங்கா சாலையில் தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான நிலம் உள்ளது. பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் இந்த நிலத்தில் தங்கி இளைப்பாறவும், அன்னதானம் வழங்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் கோயில் கட்டளைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், காலப்போக்கில் இந்த நிலத்தை தனியார் சிலர் ஆக்கிரமித்தனர்.

இதுதொடர்பாக, பழநி தேவஸ்தானம் சார்பில் உயர் நீதிமன்றம், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றங்கள், தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு, பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் இணை ஆணையரை தக்காராக நியமித்ததுடன் இந்த நிலத்தை தேவஸ்தானத்துடன் இணைத்தும் உத்தரவிட்டன.

இதையடுத்து, தண்டபாணி சுவாமிகள் மடத்துக்குச் சொந்தமான 1.40 ஏக்கர் நிலம், தக்கார் மற்றும் பழநி கோயில் இணை ஆணையருமான மாரிமுத்து தலைமையில் 60 ஆண்டுக்கு பிறகு கடந்த 2025 செப்.12ம் தேதி மீட்கப்பட்டது. இந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு ரூ.100 கோடி ஆகும். தற்போது அந்த நிலத்தில் பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக இலவச வாகன நிறுத்தம் அமைத்து, பயன்பாட்டில் உள்ளது.

இதற்கிடையே, பழநி இணை சார் பதிவாளர் கடந்த 2ம் தேதி பணி மாறுதலில் சென்ற நிலையில், கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்த மற்றொரு இணை சார் பதிவாளர் மூலம் 6ம் தேதி தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான நிலம் சட்டவிரோதமாக தனிநபர்களுக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இது பக்தர்கள், தேவஸ்தான அதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தொடக்கம்

ஒரு
புத்தகத்திற்கு
பொருளடக்கம் போலத்தான்

ஒரு ஆட்சியின்
முதல்
இரண்டு
மாதங்கள்...

அப்படிப்
பார்த்தால்

வெள்ளை
அறிக்கை
புலம்பல்கள்..

ஆய்வு
நாடகங்கள்

பழி போடும்

படலங்கள்
ஆள் தூக்கும்
அலப்பறைகள்

அமைச்சர்களின்
அமெச்சூர்
தனங்கள்..

அருவருப்பான
மரபு
மீறல்கள்

அதே அதே
ரீல்ஸ்கள்

முகச்சுளிப்பு
முகஸ்துதிகள்.

ஆக
மொத்தத்தில்

புதுத் தொடப்பம்
நல்லா பெருக்கும்
என்பார்கள்..

அதுவும்
இல்லாத

தவெக
ஆட்சியின்
தொடக்கம்...

**என்னநாஞ்
சொல்றது**

**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



### விவசாயிகளுக்கு மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும் என்ற போராட்டத்தில்

# உயிர் நீத்த விவசாயிகளின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்க வேண்டும்!

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் இ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

சென்னை, ஜூலை 14-

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் இ.ஆர்.ஈஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விவசாயத்திற் கான மின் கட்டணம் ஏற்றப்பட்டதை குறைக்க வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அப்போதைய அரசாங்கம் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டு 63 பேர் தமிழ்நாடு முழுவதும் காவல்துறையால் சுடப்பட்டார்கள். அதற்குப் பிறகு நடந்த பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு விவசாயிகளுக்கு கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து விவசாயிகள் கட்டணமில்லா மின்சாரத்தை பயன்படுத்தி விவ சாயத்தை செய்து வருகிறார்கள். இந்த வசதியால் மட்டும் தான் தமிழகத்தில் விவசாயம் தொடர்ந்து நடக் கின்றது. போராட்டத்தில் உயிர் நீத்த விவசாயிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் நினைவு தூண்கள் அமைத்து அந்தந்த பகுதி விவசாயிகள் வருடம் தோறும் அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்ட நாளில் நினைவஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.



கடந்த காலங்களில் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று உயிரிழந்த விவசாயிகள் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. கடந்த பல வருடங்களாக தொடர்ந்து விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்க காரணமாக இருந்த, உயிர் நீத்த தியாகிகளுடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்தி வருகின்றோம். தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளுடைய வாழ்வாதாரத்திற்கு அடித்தளம் அமைத்து கொடுத்தவர்கள் அவர்கள். பல்வேறு அரசுகளிடம் கருணை அடிப்படையில் அரசு வேலை கோரிக்கை வைத்தும் அது நிறைவேறவில்லை.

தற்போதைய அரசு கரூரில் அரசியல் நிகழ்ச்சியில் உயிரிழந்த குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கியிருப்பதை பார்க்கின்றோம். அரசியல் நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கலாம் என்றால் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளின் குடும்பங்கள் வாழ்வதற்காக உயிர்த்தியாகம் செய்த தியாகிகளின் குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கக் கூடாதா? ஒவ்வொரு முறை மேடையில் பேசும்போதும் விவசாயிகளோடு உடனிருப்பேன் என்று பேசுகின்ற இன்றைய முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலித்து விவசாய மின் கட்டண உயர்வுக்காக போராடி உயிர் நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு கருணையோடு தகுதி அடிப்படையில் அரசு வேலை வழங்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

## வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் பரிசு பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, ஜூலை 14-

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலுவை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

16.07.2026வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது. விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ. பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு வந்தவாசி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார். மருத்துவ ஆலோசனைகளை, மகப்பேறு மருத்துவர் டாக்டர் கவிதா வழங்குகிறார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

# மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியக் கழகச் செயல் வீரர்கள் கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்பு!

ஈரோடு, ஜூலை 14-

ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியக் கழக செயல் வீரர்கள் கூட்டம் அவல்பூந்துறையில் அவைத்தலைவர் டி.சி.ஜெயபால் தலைமையில், ஒன்றிய கழகச் செயலாளர் சு.குணசேகரன் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

அடுத்த தேர்தலில் தி.மு.க. தான் வெற்றி பெறும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். மிக விரைவில் தி.மு.க. ஆட்சியில் அமரும், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராவார்.

சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவராக உதயநிதி ஸ்டாலின் தான் முன்னிலையில் உள்ளார். தி.மு.க.வினர் பக்குவப்பட்டவர்கள், எதற்கும் பயப்படமாட்டார்கள்.

தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சராக ஸ்டாலின் அவர்கள் கற்பனை செய்யமுடியாத அளவுக்கு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை மக்களுக்காக வழங்கியுள்ளார். ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தி.மு.க. கட்டாயம் குரல் கொடுக்கும்.

மக்கள் நலனை காக்க தி.மு.க. மாபெரும் சக்தியாக உருவெடுக்கும்.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 85 நல திட்டங்கள் கொண்டுவரபட்டன. அதில் சில திட்டப்பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது என கூறினார்.

கூட்டத்தில் கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் பொதுக்குழு உறுப்பினர் என்.டி.பத்மநாபன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனசேகர், பேரூர் கழக செயலாளர் சாமியப்பன்(எ) சண்முகசுந்தரம் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, BLC, BDA, கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் ம.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், நகர துணைச் செயலாளர் ஜெகநாதன் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி பல்லடம் நகர கழக செயலாளர் நா.ராஜேந்திரகுமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.


## 13 வது ஆண்டு நினைவு நாள்



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்

(க/பெ. மறைந்த கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**

மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்